**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை (மஸ்ரப்)

தரமணி, சென்னை

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 15-04-2025**

**டிண்டிக்குள்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2025-04-15 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2025-04-16 | 2025-04-17 | 2025-04-18 | 2025-04-19 | 2025-04-20 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 37.0 | 37.0 | 37.0 | 38.0 | 38.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 26.0 | 27.0 | 27.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 2 | 2 | 2 | 2 | 2 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 180 | 200 | 220 | 250 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 4 | 4 |

| வானிலை காரணி | 2025-04-16 | 2025-04-17 | 2025-04-18 | 2025-04-19 | 2025-04-20 |
|---|---|---|---|---|---|
| எச்சரிக்கை | இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னல், புயல் போன்றவை; பலமான மேற்பரப்பு காற்று | இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னல், புயல் போன்றவை | எச்சரிக்கை இல்லை | எச்சரிக்கை இல்லை | எச்சரிக்கை இல்லை |

### முன்னறிவிப்பு சுருக்கம்:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 16, 17, 18, 19 மற்றும் 20ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 2 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### வானிலை எச்சரிக்கைகள் (பிறந்த நாளின் 08:30 IST வரை சரியானது):

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 16 மற்றும் 17 தேதி இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால்,

### வானிலை எச்சரிக்கைகளின் விவசாயம் மீது சாத்தியமான விளைவுகள் மற்றும் தொடர்புடைய அகரோமெட் ஆலோசனைகள்:

விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

### பொது ஆலோசனை:

| |
|---|
| அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (18 -24 ஏப்ரல் 2025): மழைப்பொழிவு : 18-04-2024 – 24-04-2025: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை : 18-04-2025 – 24-04-2025: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு. குறைந்தபட்ச வெப்பநிலை : 18-04-2025 – 24-04-2025: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு. |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| ஏப்ரல் 16, 17, 18, 19, 20 தேதி லேசான மழைக்கு வாய்ப்பு. வெப்பநிலை: (அதி)- 37°-38° (குறை)- 26°-27° செல்சி. வானம்: மிதமான மேகமூட்டம். காற்றின் வேகம் :மணிக்கு 2 கி.மீ, திசை: தெ.மே, தெ. |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மாம்பழம் | மா பயிரில் இலைப் பிணைக்கும் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகைப் புழுக்கள் மெல்லிய நூலிழையினால் அடுத்தடுத்த இலைகளை பிணைத்துக் கொண்டு உள்ளிருந்து பச்சையத்தை சுரண்டி உண்ணும். இலைகள் காய்ந்து விழுந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 40 மில்லி என்ற அளவில் வேப்ப எண்ணெய் மற்றும் 10 மில்லி ஒட்டுப்பசை சேர்த்து 12 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும். உரம் வைத்தல் மற்றும் மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். |
| கருமிளகு | மிளகு பயிரைத் தாக்கும் செதில் பூச்சிகளின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்புள்ளது. இவ்வகையான பூச்சிகள் மிளகுக் கொடியின் இலைக்காம்பு, இலை மற்றும் தண்டுப் பகுதிகளின் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். தாக்கப்பட்ட பகுதி மஞ்சளாக மாறி வாடிவிடும். மிளகுச் செடியின் தாக்கப்பட்ட பகுதிகளை அப்புறப்படுத்தவும். இதனைக் கட்டுப்படுத்த நாற்றங்கால்களில் வேப்ப எண்ணெய் 0.3% அல்லது மீன் எண்ணெய் ரோசின் 3.0% தெளித்து பூச்சித் தொற்றைக் கட்டுபடுத்தலாம். செதில் பூச்சியின் நடமாட்டம் காணப்பட்டவுடன் ஆசாடிராக்டின் 5000 பிபிஎம் மருந்தினை 15 |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும். உரம் வைத்தல் மற்றும் மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | தற்போது நிலவும் வெப்பமான சூழ்நிலையிலிருந்து தங்களது கால்நடைகளை காப்பாற்ற பகல் நேரங்களில் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை அவற்றின் உடம்பில் தண்ணீரை பீய்ச்சி அடிக்கவும். நிழற்ப்பாங்கான இடத்தில் 24 மணி நேரமும் போதுமான அளவு குடி நீரினை குடிப்பதற்காக வைக்கவும். தங்களது கால்நடைகளை அதிகாலை, மாலை மற்றும் இரவு நேரங்களில் உணவு எடுத்துக்கொள்ளப் பழக்கப்படுத்துங்கள். அதிகாலை மற்றும் அந்திமாலை நேரங்களில் மட்டும் மேய்ச்சலுக்கு விடுவதன் மூலம் கடுமையான வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம். |

## வானிலை எச்சரிக்கைகளின் சாத்தியமான விளைவுகள் (பொதுவான):

| |
|---|
| இடி மின்னல் எச்சரிக்கை: மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் 16.04.2025 மற்றும் 17.04.2025 தேதி இடி மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்பு. |

## தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவுரை (பொது):

| |
|---|
| கால்நடைகளை மின்கம்பம் மற்றும் மரத்தடியில் கட்டுவதை தவிர்த்து பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கவும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள். |

**Farmers are advised to download Unified �Mausam� and "Meghdoot" android application on mobile for Weather forecast and weather based Agromet Advisories and "Damini" android application for forecast of Thunderstorm and lightening.**

**Mausam MobileApp link: https://play.google.com/store/apps/details/**

**Meghdoot MobileApp link: https://play.google.com/store/apps/details**

**Damini MobileApp link : https://play.google.com/store/apps/details**